OS: 201/2019

Date: 03.06.2025

பெயர் :ராஜ்குமார்

வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை :-</u>

நான் மைக்ரோ பையாலஜி முனைவர் பட்டம் பெற்றுள்ளேன் . வாதி எனக்கு சிறுவயது முதல் பழக்கம் . என்னுடைய சிறு வயது முதல் கொங்கணாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கொங்கணாபுரம் கிராமம் எடப்பாடி தாலுக்காவை சேர்ந்தது. வாதி சாந்தி காடையாம்பட்டி தாலுக்கா , தீவட்டிப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறார் . கொங்கணாபுரத்திற்கும், தீவட்டிப்பட்டி கிராமத்திற்கும் சுமார் 50 கி.மீ தூரம் இருக்கும். வாதி எனக்கு உறவினர் கிடையாது . வாதி எனக்கு உறவினராக இல்லாத நிலையிலும் , வாதி ஊருக்கும் என்னுடைய ஊருக்கும் 50 கி.மீ தூரம் உள்ள நிலையில் வாதியை எனக்கு சிறுவயது முதல் பழக்கம் என சொல்வது தவறான சங்கதி என்று சொன்னால் சரியல்ல , வாதியும் என்னுடைய தாய்மாமாவும் ஒரே துறையில் பணிபுரிந்து வந்ததால் தெரியும் . வாதியும் என்னுடைய தாய் மாமாவும் ஒரே துறையில் பணிபுரிந்து வந்ததால் வாதியை எனக்கு சிறுவயது முதல் தெரியும் என்று முதல் விசாரணை உறுதி கூற்றில் சொல்லவில்லை . வாதியும் என்னுடைய தாய் மாமாவும் ஒரே துறையில் பணிபுரிந்து வந்தார்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை . வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார், வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியும் . வாதி என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று வாதி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல , எனக்கு நேரடியாகவே தெரியும் . நானும், வாதியும் சேர்ந்து தான் வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு தகவல் அளித்தோம் . வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வாதி எடுத்த நடவடிக்கைகளுடன் நானும் கலந்துகொண்டு வந்தேன் என்றால் சரிதான் . தாவா சொத்துக்கள் பிரதிவாதிக்கு

செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் சுமார் 7, 8 நபர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் . தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் எழுதியவர் என்ற இடத்தில் கையெழுத்து உள்ளது . வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். வா.சா.ஆ-1 ல் இரண்டுபேர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் . வா.சா.ஆ-1ல் ஒப்பந்தத்தில் எழுதியவர் என்று ஆவண எழுத்தர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான் . ஒரு ஆவணத்தில் இரண்டு நபர்கள் சாட்சி கையெழுத்து போடவேண்டும் ஆவணத்தை எழுதிய நபர் கையெழுத்து போடவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். ஆவணத்தில் சாட்சிகள் மற்றும் ஆவணம் எழுதியவர் கையெழுத்து போடவில்லை என்றால் அந்த ஆவணம் செல்லாது என்றால் அப்படியெல்லாம் சொல்லமுடியாது. ஒரு ஆவணத்தில் முதலில் யாருக்கு யார் ஆவணம் எழுதிகொடுக்கிறார் என்ற விவரம் சொல்லப்படும் . ஆவணத்தை எழுதிகொடுக்கும் நபரே ஆவணத்தை எழுதினால் சுயலிகிதம் என எழுதி கையெழுத்து போடுவது வழக்கம் என்றால் சரிதான் . வா.சா.ஆ-1 ல் 18.04.2016 தேதிய மேற்குறிப்பில் ஒரு நபர் தான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். 18.04.2016 தேதிய மேற்குறிப்பில் இன்னார் இன்னாருக்கு எழுதிகொடுத்தது என்ற விவரம் உள்ளதா என்றால் கூடுதலாக எழுதிகொடுத்ததால் வா.சா.ஆ-1 ல் நான் கையெழுத்து போட்டுள்ளேன் . 18.04.2016 தேதிய மேற்குறிப்பில் வா.சா.ஆ.1 ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட தொகை என்ற விவரம் இல்லை, நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்டது. 18.04.2016 தேதிய மேற்குறிப்பை எழுதியவர் யார் என்ற விவரம் இல்லை. பிரதிவாதி தலைமை சுகாதார செவிலியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். 2018 ம் ஆண்டு பிரதிவாதி ஓய்வு பெற்றார் . 2016 ம் ஆண்டு பணியில் தான்

இருந்தார். 18.04.2016 ம் தேதி வாதி கையில் இருந்த பணத்தை கொடுத்தார் . எங்கிருந்து எடுத்துவந்தார் என்று எனக்கு தெரியாது . வாதி கையில் எவ்வளவு பணம் வைத்திருப்பார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவ்வளவு விவரம் எனக்கு தெரியாது .. வாதியிடம் தொகையை எவ்வாறு சேகரித்தீர்கள் என்று நான் கேட்கவில்லை . 18.04.2016 ம் தேதி நான் வாதி வீட்டில் இருந்தேன் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை , நான் அவர் வீட்டிற்கு வருவேன் செல்வேன் . வாதி வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது . வாதிக்கு அவர் வீட்டிற்கு உள்ளவர்களுடன் நல்ல பழக்க வழக்கம் தான் . 18.04.2016 தேதிய மேற்குறிப்பில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்தே இல்லை என்று சொன்னால் அவர்தான் போட்டுள்ளார் அவர் கையெழுத்து அவருக்கு தெரியும் . பிரதிவாதி வா.சா.ஆ-1 ஒப்பந்தம் forfeited என பிரதிவாதி அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் 18.04.2016 தேதிய மேற்குறிப்பு நானும், வாதியும் சேர்ந்து தயார் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல . 18.04.2016 தேதிய மேற்குறிப்பு மோசடியாக தயார் செய்யப்பட்டது என்பதால் தான் உள்ளூரில் உள்ள யாரிடமும் சாட்சி கையெழுத்து பெறாமல் நான் சாட்சி கையெழுத்து செய்து தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல . 18.04.2016 தேதிய மேற்குறிப்பு அவசர கதியில் தயார் செய்யப்பட்டதால் தான் எழுதியவர் யார் என்ற விவரம் மேற்சொன்ன மேற்குறிப்பில் துலங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதியே 18.04.2016 தேதிய மேற்குறிப்பை எழுதிகொடுத்திருந்தால் சுயலிகிதம் என குறிப்பிட்டு கையெழுத்து செய்திருப்பார் என்று சொன்னால் நம்பிக்கையின் பேரில் 2 குடும்பமும் சேர்ந்து ஏற்பட்டது. நான் சொல்வதுபோல் 18.04.2016 ம் தேதி பிரதிவாதி ரூ.50,000/- பெறவில்லை என்றும், அந்த மேற்குறிப்பை பிரதிவாதி எழுதிகொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல .. வாதி ரூ.2,00,000/- தயாராக வைத்திருந்தார் என்பதை நான் நேரில் பார்த்துள்ளேன் , காசோலை வைத்திருந்தார். வாதி அளித்துள்ள சாட்சியமும், நான் அளித்துள்ள சாட்சியமும் முன்னுக்கு

பின் முரணாக உள்ளது என்றால் இல்லை . வாதி வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தை நிறைவேற்றி கொள்ள எந்த காலத்திலும் தயாராகவும், விருப்பமாகவும் இருந்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல . வாதி எனக்கு வேண்டியவர் என்பதாலும் , வாதி என்னிடம் கேட்டுக்கொண்டதற்காகவும் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:- இல்லை.

ஒப்பம்/- PW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்